[1969 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 73.10 இலட்சத்தில் புதிய பாலம் அமைப்பதற்கு அனுமதி கோரி மத்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டுள்ளது. எனவே, இதற்காக ரூ. 10,000 ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஏ. எம். இராஜா : இப்பொழுது காவேரி பாலம் மிகவும் வீக்-ஆக இருப்பதால் அதை உடனடியாகப் பழுது பார்த்து—இப்பொழுது போக்குவரத்திற்கு அது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஒரு புறம் இருந்து லாரியோ, பஸ்ஸோ வந்தால் மறு புறத்தில் எதுவும் போகமுடியவில்லை. ஆகவே, உடனடியாக அந்தப் பாலத்தை—தற்காலிகமாக அகலப்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிரந்தரமாகப் பரிகாரம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னுல் டெல்லியில் அமைச்சர்களைச் சந்தித்த நேரத்தில் இந்தத் திட்டத்தை விரைவாக எடுத்து நடத்துவதாக அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பவானியும் காவிரியும் சங்கமமாகிற இடத்தில் இரண்டு பாலங்கள் இருக்கின்றன. அந்த இரண்டையும் ஒரே பாலமாக காவிரியில் அமைத்தால் நன்ருக இருக்கும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி என்ருல் அதைக் கட்டுவதற்கு சர்க்கார் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரே பாலமாக அமைக்க ஒரு செயற்குறிப்பு ஆராயப்பட்டு வருகிறது. போர்ஸ் ஆப் ரிவரை கணக்கெடுத்து வருகிருர்கள். டெல்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இதை விரைவாக நிறைவேற்றித் தருவதாக அவர்கள் வாக்களித்துள்ளார்கள்.

சீர்காழி—கும்பகோணம் சாலை

*211 வின.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகர எல்லைக்குள் உள்ள அரசாங்க நெடுஞ்சாலையை (சீர்காழி—கும்பகோணம் சாலை) விரிவாக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயூரம் நகராட்சி எல்லைக்குள் உள்ள சீர்காழி-கும்பகோணம் சாலையை விரிவு படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போதைக்கில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு சென்ற ஆண்டில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ரூ. 1,25,000 மதிப்பீட்டில் ஒரு திட்டம் இருப்பதாகவும், பண வசதி

கிடைக்கின்ற நேரத்தில் அதை நிறைவேற்றிக் கொடுப்பதாகவும் பதில் அளித்தார்கள். இப்பொழுது அந்தத் திட்டம் எந்த வகையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டம் இருக்கிறது. தற்பொழுது சாத்தியம் இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர திட்டம் கைவிடப்பட்டதாக இல்லை.

பாலாறு-பொருந்தலாறு திட்டம்

* 212 *வினா.*—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்தில் பாலாறு, பொருந்தலாறு திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்டத்திற்கான விவரங்கள் மத்திய நீர், மின்விசை குழுவிற்கு, ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் கிடைத்ததும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு செலவு எவ்வளவு ஆகிறது ? இதனால் புதிதாக எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு 2.56 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது சுமார் 10,000 ஏக்கருக்கும் புதிதாக சுமார் 4,000 ஏக்கருக்கும் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலைநாயக்கர் மஹால்

* 213 *வினா.*—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. கே. வினாயகம் :
திரு. டி. மார்டின் :
திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை திருமலைநாயக்கர் மஹாலை புதுப்பிக்க செலவு செய்யப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருமலை நாயக்கர் மஹாலைப் புதுப்பிக்க 1966-67-ல் 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவுத் தொகை அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 1,020 செலவு செய்யப்பட்டுள்ளது.